பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 9உ (26—10—67) வியாழன் வெளியூர் : ஐப்பசி 10உ (27—10—67) வெள்ளி [இதழ் : 111

அரசு ஊழியர்கள் பாதிக்கப்படுவர் !

மத்திய அரசின் ஊழியர்களுக்குத் தரப்படுவதற்குச் சமமாக மாநில ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி தருவதற்காக, மைசூர் மாநில அரசு மத்திய அரசிடம் நிதியுதவி கோரியிருந்தது !

'இந்த உதவியை அளிக்க முடியாது' என்று மத்திய அரசு மறுத்துவிட்டது !

எனவே, மாநில அரசின் ஊழியர்களுக்கு அதிக கிராக்கிப்படி தரும் யோசனையை, மைசூர மாநில அரசு கைவிட்டு விடப் போவதாகத் தெரிகிறது !

வட சென்னையில்

சீரணியின் சீரிய பணி

இரவுபகலாக வடிகால் வெட்டும் வேலை தொடர்கிறது

இதுவரை 4,300 அடி நீளக் கால்வாய் தோண்டப்பட்டது

தொண்டர்களை உற்சாகப்படுத்துவதில் மக்கள் காட்டும் ஆர்வம்

வட சென்னை வடிகால் திட்டம் சென்னை 32-வது வட்டம் வியாசர் பாடி—கலியாணபுரத்தில் 5—10—67-[illegible] அறிஞர் அண்ணா அவர்களால் துவ—கி வைக்கப்பட்டு [illegible]டர்ந்து நடைபெற்று வருகிறது. இரவும் பகலுமாகச் [illegible] தொண்டர்களும், ஊர்ப் பொதுமக்களும் மிகுந்த உற்ச[illegible]டன் பணியாற்றிவருவது அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது. 4,500 அடி நீளமுள்ள கால்வாயை சிறிதும் மனம் தளர்ச்சியின்றி வெட்டிக்கொண்டு வருகிறார்கள்.

சென்ற வாரம் அறிஞர் அண்ணா அவர்கள், இப்பணியினைப் பார்வையிட்டு, ஈடுபட்டுப் பணியாற்றும் தொண்டர்களையும், தாய்மார்களையும் பாராட்டினர்.

அதற்குப் பின், இப்பணியில் மேலும் ஏராளமான ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டு, இன்னும் வேகமாகப் பணியாற்றுகின்றனர்.

இதுவரையில் 4,300 அடி நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இன்னும் எஞ்சியிருப்பது 200 அடி நீளமாகும். அதுவும் ஓரிரு நாட்களில் முடிந்துவிடும்.

இப்பணியில் தொழிலாளர்களும், கல்லூரி மாணவ – மாணவியரும், கிறித்துவப் பள்ளிகளைச் சார்ந்த பாதிரிமார்களும்—மாணவர்களும், தொழுநோய் விடுதித் தோழர்களும் ஈடுபட்டுப் பணியாற்றியது, வெகுவாகப் பாராட்டத்தக்கதாகும்.

அமைச்சர் மாதவன் வருகை

நாளை காலை சீரணியினரின் கால்வாய் வெட்டும் பணியினை சட்ட அமைச்சர் சே. மாதவன் பார்வையிட்டு, தொண்டர்களுக்கு உற்சாகமூட்டுவார்.

இத்திட்டத்தின் சீரிய பணியினைப் பற்றியும், இதுவரையில் தொடர்ந்து பங்கு கொண்டிருக்கும் சீரணித் தொண்டரின் புகைப் படங்களைத் தொகுத்தும், மலராக வெளியிட வேண்டியிருப்பதால், இப்பணியில் ஈடுபட்ட தொண்டர் அனைவரும் அக். 27, 28 ஆகிய நாட்களில் அவசியம் வந்து சீரணித் தலைவர்களைச் சந்திக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"தோழர்கள் சுந்தரம், தங்கரத்தினம், சு. சிங்காரம் ஆகியோரின் மேற்பார்வையில் எஸ். பூபாலன், பச்சையப்பன், எம். மாரி, கே. மாரிமுத்து, எட்டி, நடேசன், சாமிக்கண்ணு, செல்லக்குட்டி, வேதாநந்தம், ஜே. பாபு ஆகியோர் அணி அணியாகப் பிரிந்து இரவு நேரங்களில் பணியாற்றுகின்றனர்.

"தோழியர்கள் இல்லாமல்லி, அஞ்சலை, வேதமணி, கிளியாம்பாள், ஜெயா, பாலையம்மாள், கன்னித்தாய் ஆகியோர் தொடர்ந்து பணியாற்றுகின்றனர்.

"பெரம்பூர் தொகுதித் தலைவர் ஜி. டில்லிராஜ், பூங்காநகர் தொகுதித் தலைவர் மணிவண்ணன், நகராட்சி உறுப்பினர் அன்பிற்கரசன் ஆகியோர் உடனிருந்து எல்லா பணிகளையும் கவனித்து வருகின்றனர்" என்று, வட சென்னை சீரணிச் செயலாளர் சு. பாலன் எம்.சி. அறிவிக்கிறார்.

கே.ஏ. மதியழகன் இத்தாலி பயணம்

உணவு மாநாட்டில் கலந்துகொள்கிறார்

இத்தாலியின் தலைநகரான ரோமில் நடைபெறவிருக்கும் அனைத்துநாடுகளின் உணவு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் இந்தியத் தூதுக் குழுவில், தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கலந்துகொள்வார்.

"தம்முடன் தமிழக உணவு அமைச்சரை அனுப்பிவைக்குமாறு மத்திய உணவு அமைச்சர் செகஜீவன்ராம் கேட்டுக்கொண்டார்; அமைச்சர் மதியழகனை அனுப்பிவைக்க ஒப்புதல் அளித்து, செகஜீவன் ராமுக்கு பதில் எழுதியிருக்கிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மூடப்பட்ட ஆலைகளை இயங்க வைக்கச் சட்டம்

மத்திய அமைச்சரவை முடிவு

புதுடில்லி, அக். 25—

கட்டுப்படி ஆகாத அல்லது சீர்குலைந்துள்ள பஞ்சாலைகளை மீண்டும் தெம்புடன் இயங்கச் செய்வதற்கு வழி செய்வதற்காகச் சட்டம் இயற்றுவதென்று மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நாட்டில் உள்ள பல பஞ்சாலைகளில் மிகவும் பழமையான—காலத்துக்கு ஒவ்வாத இயந்திரத் தளவாடங்கள் உள்ளன. மொத்தத்தில் நாட்டில் 600 பஞ்சாலைகள் உள்ளன. அவற்றில் 20 முதல் 25 சதம் ஆலைகளில் மிகவும் பழைய இயந்திரச் சாதனங்களே உள்ளன.

இப்படிப்பட்ட பஞ்சாலைகளை அரசு மேற்கொள்வதற்கும் பயன்படாதவைகளை மூடிவிடுவதற்கும் வகை செய்வதற்கான சட்டம் விரைவில் கொண்டுவருவதற்கு மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

திறப்பது எப்படி ?

இந்தச் சட்டப்படி, நட்டத்தில் நடைபெறும் ஆலைகளின் நிலைமையை அதிகாரி ஒருவர் ஆராய்ந்து, 'அந்த ஆலையை மூடிவிடலாம்' என்றோ, 'புதுப்பிக்கலாம்' என்றோ முடிவு செய்வார்.

'மூடிவிடலாம்' என்ற முடிவுக்கு வந்தால் அதற்கு ஒருவிலையை அரசு நிர்ணயிக்கும்; 'அந்த விலைக்கு ஆலையை வாங்க யாரும் முன்வருகிறார்களா' எனக் கேட்கப்படும்; எவரும் முன்வரவில்லையானால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரசு அதை வாங்கிக்கொள்ளும்.

ஆலைகளின் பங்குதாரர்களை அணுகி, அவர்களின் பங்குகளை அரசு வாங்கிக்கொள்ளவும், புதிய பங்குகளை வெளியிடவும் இந்தச் சட்டத்தில் வகை செய்யப்படும். இதன் மூலம் ஆலையின் நிர்வாகத்தில் அரசு முக்கியப் பங்கேற்கும்.

கோவையில் மூடிக் கிடக்கும் ஆலைகள் இரண்டுதான்

அவற்றையும் திறக்க தமிழக அரசு முயற்சி

கோவை, அக். 26—

"கோவையில் மூடப்பட்ட ஆலைகளில் இன்னும் இரண்டு ஆலைகளே திறக்கப்பட வேண்டியிருக்கின்றன; மற்றவை அனைத்தும் திறக்கப்பட்டுவிட்டன; மூடப்பட்டுள்ள ஆலைகளுக்கு உதவி செய்து மீண்டும் அவைகளைத் திறப்பது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த டில்லி அதிகாரி ஒருவர், நாளை (அக். 27) கோவைக்கு வருகிறார்; அவருடன், நிலைமை பற்றிக் கலந்துபேசி முடிவு எடுக்கப்படும்"

என்ற தகவலை, முதலமைச்சர் அண்ணா அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் கூறினர்.

அண்ணா அவர்கள், நேற்று மாலை விமானம் மூலம் இங்கு வந்து சேர்ந்தார்; அவரை மாவட்டக் கலெக்டர் அம்புரோஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.கோவிந்தராசுலு, இரா. மாணிக்கவாசகம், திருப்பூர் சு. துரைசாமி, பாராளுமன்ற உறுப்பினர்கள் பி. ஏ. சாமிநாதன், சி. டி தண்டபாணி, மற்றும் எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.சி., கழகத் தோழர்கள் வரவேற்றனர்.

விமான நிலையத்தில், அண்ணா அவர்கள், சுமார் ஒரு மணி நேரம் கலெக்டருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தொழிற்சாலைகள் செலுத்த வேண்டிய இன்சூரன்சு பிரிமியம்

ரூ. 24 கோடி வசூல்

புதுடில்லி, அக். 27—

நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் செலுத்த வேண்டிய இன்சூரன்சுப் பாக்கியில் ரூ. 24 கோடியை மத்திய நிதியமைச்சகம் கடந்த சில மாதங்களில் வசூலித்துள்ளதாக விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

சில நிறுவனங்கள் தமது பிரிமியத் தொகையைப் பல ஆண்டுகளாகச் செலுத்தாமலிருந்தன.

நாட்டிலுள்ள தொழி[illegible]லைகள் அனைத்தும், அவசர [illegible] களின்படி கட்டாயமாகப் [illegible] ஆபத்து இன்சூரன்சைச் செய்து கொள்ள வேண்டும்.

அரிசி ஏற்றுமதி மூலம் டாலர் ஈட்டுகிறது பாகிஸ்தான் அரசு

மிகவும் தரமான 'பாசுமதி' அரிசி பாகிஸ்தானத்திற்கு டாலர் சம்பாதித்துத் தரும் முக்கியமான பண்டமாகி வருகிறது.

பாகிஸ்தான் இவ்வாண்டில் ரூ. 21 கோடியே 60 இலட்சம் மதிப்புள்ள 'பாசுமதி' அரிசியை ஏற்றுமதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இது, இதற்கு முந்திய காலத்து ஏற்றுமதி அனைத்தையும் மிஞ்சிவிடும்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் — அரசு உடன்பாடு

சென்னை. அக், 25—

'ஏ. டி. டி. 27' வகை நெல்லை அரைத்து எத்தனை சதவிகிதம் அரிசி கொடுக்க வேண்டும் என்பது சம்பந்தமாக, அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் அரசுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.

'ஆலைகளில் அரைக்கப்படும் நெல்லில் அரிசியாக 63.5 சதவிகிதம்தான் தர முடியும்' என்று ஆலை உரிமையாளர்கள் கூறி வந்தார்கள்; '65.5 சதவிகிதம் அரிசியாகத் தர வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட அளவு நியாயமானது' என்று உணவு வழங்கு துறை அதிகாரிகள் கூறிவந்தனர். ஆலை உரிமையாளர்களின் பிரதிநிதிகள் முதலமைச்சர் அண்ணா அவர்களையும, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களையும் சந்தித்துப் பேசினர்; 'அரைக்கப்படும் நெல்லில் 65 சதவிகிதம் அரிசியாகக் கொடுக்க வேண்டும்' என்று இந்தக் கூட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டது.

மணிபுரியில் ஓர் அரசியல் விநோதம்!

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கு[illegible]ரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம்

புதுடில்லி, [illegible]. 25—

மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான மணிபுரி, [illegible]டியரசுத் தலைவரின் நேரடி ஆட்சிக்கு வந்துவிட்டது.

இதற்கான அறிவிப்பில் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் கையெழுத்திட்டார்.

32 உறுப்பினர்கள் உள்ள மணிபுரி சட்டமன்றத்தில் முறையே 16 காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களும்—16 ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும் சட்டமன்றத் தலைவர் பதவிக்குப் போட்டியிட முன்வராததால், சட்டமன்றக் கூட்டம் நாள் அறிவிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

நிலைமையை ஆராய்ந்தபின், 'குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை' என்று மத்திய அமைச்சரவை முடிவுக்கு வந்தது.

'சட்டமன்றத்தை நடத்துவது இயலாது' என்று தெரிந்ததால் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 9 (26—10—67) வியாழன்

பக்தவத்சலத்தின் சொத்தை வாதம்!

[1]

தென் சென்னை இடைத்தேர்தலில், காங்கிரசு வேட்பாளருக்கு ஆதரவு தேடிப் பிரச்சாரம் செய்வதில் ஊர் பேர் தெரியாதவர்கள் எல்லாம் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றபொழுது, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் ஈடுபடாமல் இருப்பாரா? காங்கிரசு வேட்பாளருக்கு ஆதரவு கிடைப்பது பற்றிய கவலை துளியும் தமக்கில்லை என்பதை வெளிப்படுத்திக்கொள்வது போலவும், கழக ஆட்சியை இழிவுபடுத்திப் பேசினால் அதுவே தமக்கு மன அமைதியைத் தரும் என முடிவு கட்டியிருப்பது போலவும் பக்தவத்சலனார், இத்தேர்தல் பிரசாரத்தைச் செய்துவருகின்றார்.

முதலமைச்சர் பதவி தம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டதில் பக்தவத்சலத்துக்கு எந்த அளவு ஆத்திரம் இருக்கிறதோ அதைவிடப் பல்லாயிரம் மடங்கு அப்பொறுப்பில் அறிஞர் அண்ணா அவர்கள் இருந்துவருவது அவருக்கு ஆத்திரத்தைக் கொடுத்து வருகிறது என்ற உண்மையை, அவரே ஒளிவுமறைவு இல்லாமல் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

தென் சென்னைத் தொகுதியில் நாடாளுமன்ற வேட்பாளராக நின்று வெற்றி பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள், கழகத்துக்குப் பெரும்பான்மை கிடைத்ததும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை, பக்தவத்சலனார் நையாண்டி செய்திருக்கின்றார். வெறும் நையாண்டி மட்டும் அல்ல அது; அவருக்குள்ள வயிற்றெரிச்சலும் அதன் மூலம் வெளிப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணா அவர்கள், அப்பதவியைத் துறந்துவிட்டு மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவது சட்டவிரோதமானதல்ல; அண்ணா அவர்கள் தான் முதன்முறையாக இப்படிச் செயல்பட்டிருக்கின்றார் என்பதுமில்லை.

மாநிலச் சட்டமன்றத்தில் காங்கிரசல்லாத வேறு சில அரசியல் கட்சிகள் வெற்றி பெற்றுக் கூட்டாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் துணிகின்றபொழுது, அதில் முதலமைச்சராவதற்காகத் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்திருந்தாலாவது—அதிலும் குற்றமில்லை என்றாலும்—முன்னாள் முதலமைச்சர் குறைபட்டுக்கொள்ளுவதில் சிறிதளவாவது பொருத்தம் இருந்திருக்கக்கூடும். தம்மைத் தலைவராகக் கொண்ட கட்சி பெரும்பான்மை பெற்றுவருகின்றபொழுது, அமைக்கப்படுகின்ற ஆட்சி, 'செம்மையாகவும் திறமையாகவும் செயல்பட்டுவர வேண்டுமே' என்ற கவலை கொண்டுள்ள அக்கட்சியின் தலைவர், வேறு ஓர் இடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் அதைத் துறந்துவிட்டு, மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றுகொள்ளுவதில் தவறு என்ன இருக்க முடியும்?

இதுவுமன்றி, அண்ணா அவர்களை நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்த தென் சென்னைத் தொகுதியில், ஆறு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. அந்த ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அறுவரும் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களே யாவர். இந்த வகையில், தென் சென்னை வாக்காளர்களின் ஆதரவு முழுவதும் கழகத்திற்கே இருக்கின்றபொழுது, அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்ததும், தமிழக முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டதும், 'அத்தொகுதி வாக்காளர்களின் விருப்பத்துக்கு மாறானது அல்ல' என்பதை மெய்ப்பிப்பதற்குப் போதுமான நியாயமாகும்.

சட்டமன்றத் தேர்தலில் தோற்றுப்போய்—மேல் சபைக்கு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டு—அமைச்சர்களில் ஒருவராகப் பதவி பெற்ற மீஞ்சூர் பக்தவத்சலனார், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அண்ணா அவர்களை நையாண்டி செய்யக் கிளம்பியிருப்பது, வியப்பிலும் வியப்பாகும்.

நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர் காமராசர் அவர்கள் போட்டியிட்டு—இரண்டு இடத்துக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்றப் பதவியை விட்டுவிட்டு சட்டமன்ற உறுப்பினர் பதவியை வைத்துக்கொண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுது, இன்று கொக்கரித்துக் கிளம்புகின்ற இதே பக்தவத்சலனார், ஏன் வாயடைத்துக் கிடந்தார்?

இதுமட்டுமா? இன்னும் உண்டு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அந்த உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு மேல் சபை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டு, தாம் அமைச்சராக இருந்த அமைச்சரவையிலேயே ஓர் அமைச்சராக இருந்துவந்த உண்மை, இந்த மீஞ்சூராருக்குத் தெரியாதா?—இப்பொழுது பேசுகின்ற 'அரசியல் அறம்' பற்றி, அவருடைய திருவாய் அப்பொழுது அடைத்துக்கிடந்ததற்குக் காரணம் என்ன?

அண்ணா அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டதால் மறு தேர்தல் வந்ததாம்; இதனால் வீண் செலவு ஏற்பட்டிருக்கிறதாம்! இதுவும் பக்தவத்சலனார் எரியுள்ளத்திலிருந்து கிளம்பியுள்ள பொருளற்ற பிதற்றல்! இதற்கு விளக்கம், மேலே கூறப்பட்டிருக்கிறது.

—கா. க.

முதலிலே ஏற்பட்ட திகைப்பு முற்றிலும் மாறிவிட்டது!

அனுபவம் சிறிதுமில்லாதவர்கள் ஆற்றியுள்ள பணியினைக் கேளீர்!

வசதியற்ற சூழ்நிலையிலும் வளம் பெருக்கத் திட்டம் வகுத்தோம் -- ஏழு திங்களில் தமிழகம் பெற்ற சிறப்பு -- அண்ணா பெருமிதம்

ஏ. வி. தாமஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பி. சீனிவாசன் அவர்கள் அளித்த தேநீர் விருந்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில், தமது அமைச்சரவை பதவி ஏற்றபோது நிலவிய சூழ்நிலையையும், இன்று ஏற்பட்டுள்ள மகத்தான மாறுதல்களையும் எடுத்து விளக்கினார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

எந்நிலையில் ஏற்றோம்?

"நிர்வாகத்துக்கு நாங்கள் புதியவர்கள்; எத்தனையோ தொல்லைகளும், சிக்கலும் மிகுந்ததாக நிர்வாகம் இருந்தது.

என்னுடைய அமைச்சரவை நண்பர்கள் நிர்வாகத்துக்குப் புதியவர்கள் என்றாலும், அவர்களுக்குப் பாரம்பரியம் உண்டு.

தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளைத் தங்களது கடின உழைப்பின் மூலம் செம்மையுற முடித்து வெற்றி பல கண்டவர்களே அவர்கள்!

'தமிழ் மக்களின் நல்லெண்ணம்' என்ற துணையோடு ஆட்சிப் பொறுப்பினை நாங்கள் ஏற்றோம்.

அன்பைக் காட்டிலும் அச்சமே நிலவியது!

நிர்வாகத்தில் அனுபவம் பெற்ற அதிகாரிகளின் நல்லொத்துழைப்பும் எங்களுச்குக் கிடைத்துள்ளது.

அதிகாரிகளோடு எங்களுக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு விசித்திரமாக இருந்தது! அன்பைக் காட்டிலும் அச்சமே மேலிட்டு நின்றது!

'20 ஆண்டுகள் ஒரே கட்சியுடன் பழகியதால், அதிகாரிகளிடம் பதிந்துவிட்ட மனோபாவ நிலைகளிலிருந்து அவர்களை மீளச் செய்வது இயலக்கூடியது தானோ' என எண்ணினோம்; இதில் நாங்கள் வெற்றி கண்டோம்; காரணம், நாங்கள் அவர்கள் உள்ளங்களை வேண்டினோம்! அளவிடமுடியாத அதி முக்கிய உதவியைப் பெற்றோம்! நாட்டின் நிர்வாகத்தை நடத்திச் செல்லும் ஆற்றல்படைத்தவர்கள் மட்டுமல்லாமல், புதியவர்களுக்கு வழிகாட்டவும் வல்லவர்கள் நம் அதிகாரிகள்!

எங்கள் குறிக்கோள்!

சமுதாயத்தின் ஒவ்வொரு தரப்பாருடைய நன்மையும் அவரவர்களது மகிழ்ச்சியுமே எங்கள் குறிக்கோள்!

இப்படி ஒவ்வொரு பகுதியினரும் மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதன் மூலம் சமூகம் முழுமையும் மகிழ்ச்சியுடன் இருக்க வழிகோல வேண்டுமென்பதே எங்கள் குறிக்கோள்!

இந்தக் குறிக்கோளை நோக்கிப் பணியாற்றுவதில் இதுவரை நாங்கள் வெற்றி கண்டுள்ளோம்!

...கை இலட்சியம்

'எல்லோருக்கும் நண்பன்—எவருக்கும் விரோதியல்ல' இப்படித்தான் நாங்கள் இருக்க விரும்புகிறோம்.

அமைச்சரவையில் இருந்தாலும்—வெளியே இருந்தாலும்—மக்களுக்குப் பணிசெய்வோம்! மக்கள் பணி என்பது எங்களது வாழ்க்கை இலட்சியம்!

எங்களது பணியில் பலரது நல்லெண்ணம். எங்களுக்குத் துணையாக இருக்கிறது; சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியினரது நல்லாதரவும் எங்களுக்குக் கிடைத்துள்ளது; இதை எண்ணி மகிழ்கிறோம்.

செட்டாக — சிக்கனமாக!

நாங்கள் எத்தகைய நிலையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றோம்?—விவசாயம் நிலை குலைந்திருந்தது—உணவிலே நெருக்கடி—நிதி விவகாரத்திலே ரிசர்வ் பாங்கியிடம் அதிகப் பற்று—இந்த நிலையில்தான் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றோம்!

முதலாவது வரவு-செலவுத் திட்டத்தையே, ஏற்பட்டிருந்த இந்த நிலைமைகளைச் சமா... திடத்தக்கதாகத் த... வேண்டியதாயிற்று!

புதிய அமைச்ச... துடித்தனர்! அவரவர் துறைகளில் செய்யப்பட வேண்டிய பணிகளுக்கு அதிகப் பணம் ஒதுக்கித் தரும்படிக் கேட்டவாறு இருந்தனர்!

"ஆசை, ஆர்வங்களையெல்லாம் சற்றுக் கட்டுப்படுத்தி, இருப்பதைக் கொண்டு செட்டாக—சிக்கனமாகக் காரியமாற்ற முனைவோம்" என்று நான் அவர்களுக்குச் சொல்ல வேண்டியதாயிற்று!

ஆறு திங்கள் போதுமா?

நாங்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நேரம், பொருளாதார மந்தம் ஏற்பட்டிருந்த நேரமாகும்; இருப்பினும், இயன்ற அளவுக்குத் தொழில் விரிவடையக் காரியங்களைச் செய்திருக்கிறோம்!

மிகப் பிரமாதமாகத் தொழில்களில் துவக்க விழாக்களை நடத்தி வைத்துவிட்டால் மட்டும் போதாது; ஏற்கனவே உள்ளவை நிலைத்து வலிவுடன் விளங்கத் தேவையான காரியங்கள் செய்யப்பட வேண்டும்; அதை நாங்கள் செய்திருக்கிறோம்; இதை நீங்கள் உணருவீர்கள்!

தொழில்கள் பெருக — வாழ்க்கைத் தரம் உயர—ஆறு மாதம் போதாது!

பிணக்குகள் ஏற்பட கருவியாக மாட்டேன்!

உங்களது நல்லெண்ணமும் நல்லாசியும் தொடர்ந்து இப்போது போல் எப்போதும் வரவேண்டும்; அப்போதுதான், பல பெரும் சாதனைகளை இத்துறையில் செய்துகாட்ட இயலும்.

(3 ம் பக்கம் பார்க்க)

இந்திரா அமைச்சரவையின் எள்ளிநகையாடத்தக்க செயல்!

'உள்ளூரில் விலைபோகாத சரக்கு' உலகம் சுற்றுவானேன்!

"உள்நாட்டில் சமாளிக்க இயலாத பிரச்சினைகளை வைத்துக்கொண்டு, பிரதமர்—நிதி மந்திரி—உருக்கு மந்திரி—தொழில் மந்திரி—வர்த்தக மந்திரி ஆகியோர் உலகப் பயணம் செல்வது, அவர்களுக்குப் பொழுதுபோக்காக இருக்கலாம்; ஆனால் வெளிநாட்டவரும் சரி—நம் நாட்டவரும் சரி—எள்ளிநகையாடும் நிகழ்ச்சியாகவே அமைந்திருக்கிறது."

என்று, 'மித்திரன்' (அக். 23–24) இதழின் தலையங்கம் கூறுகிறது. 'சரக்கு இருந்தால் உள்ளூரில் விலை போகாதா?' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் வருமாறு:—

வண்டியிலிருந்து அவிழ்த்துவிடப்பட்ட குதிரைபோல், பார்லிமெண்டு கூட்டத் தொடர் முடிவடைந்ததும், மத்திய மந்திரிகள் தம் போக்கில் சுற்றுலா கிளம்பி விடுகின்றனர்!

நாட்டிற்குள்ளே அலுவல்களை அமர்த்திக்கொண்டு உல்லாச பவனி வருவோர் சிலர்! வெளிநாடுகளில் ஒய்யார 'யாத்திரை' கிளம்புவோர் மற்றும் சிலர்!

முந்தியதையாவது சகித்துக் கொள்ளலாம் — 'பயணப் படி நஷடத்தோடு போகிறது' என்று! பிந்தியதோ, அரிய அந்நியச் செலாவணியை அரித்து விழுங்கி விடுகிறது!

நமது மதியூக மாமந்திரிகள் நேரில் சென்று க...ிக்கத்தக்க அலுவல்கள், அ...டங்களில் ஒன்றுமிருக்க நியாயமில்லை.

அயல்நாடுகள் அனைத்திலும், பாரதத்தி... பெயரைச் சொல்லிகொ... தூதரகங்களில் பெருங்... முகாம் செய்திருக்கி... இவை செய்ய முடியாததை ...மது அமைச்சர்கள் சென்று ...தித்துவிடப் போகிறார்களா ...ன்ன?

பிற நாட்... பிரதமர்கள், மந்திரிகளுடன் நேரிடைத் தொடர்பினால் கிடைச்கும் அரிய பலன்களைக் கண்கூடாகக் காணமுடியாது. 'அளவு கோலால் நிர்ணயிக்க முடியாது' என்று சமாதானம் கூறப்படலாம்.

இது உண்மையானல், இந்திராவின் மேற்கு திக்கு விஜயத்தினால் கிடைத்த பலன்தான் என்ன? வந்தவுடன் அவர் அளித்த பேட்டியிலிருந்து, பாகிஸ்தானுடன் நமது தகராறைத் தீர்க்க இரஷ்யா உதவப் போவதில்லை என்று தெரிகிறது! மத்தியக் கிழக்கு நெருக்கடி தீராது என்று தெரிகிறது! சூயஸ் கால்வாய் முன்போல் மூடியே இருக்கும் என்று தெரிகிறது! இந்திரா கிளம்பிப் போகு முன் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த விஷயங்கள்தாமே இவை!

மேலும், ஒரு நாட்டின் பொருளாதார வலிமையைப் பொறுத்தே அதற்கு வெளியில் மதிப்பும், மரியாதையும் இருக்கும் என்பது வரலாறு புகட்டும பாடம்!

இந்தியாவில் முதலிடுவதற்கு ஜப்பான் தயங்குகிறது என்றால், அதற்கு இந்நாட்டிலுள்ளபொருளாதார—அரசியல் குழப்பமே காரணம்!

மத்தியில் காங்கிரசு பலம் குன்றி, பெரும்பான்மை மாநிலங்களில பிற கட்சிகள் ஆட்சி செலுத்துகின்றன; இதனால் விளைந்துள்ள விசித்திர நிலைமையைச் சமாளித்து நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்திச செல்ல முயலாமல், அயல்நாடுகளுக்குச் சென்று அவசியமற்ற ஆலோசனைகளில் ஈடுபடுவதை, 'மதியீனம்' என்றுதான் எவருக்கும் நினைக்கத் தோன்றும்."

குடியானவர் வரவேற்பைப் பெறும் வெண் புலி!

'புலி வருகிறது; புலி வருகிறது' என்றால், இந்தியக் கிராமவாசிகளுக்குக் கிலிதான்; ஏனென்றால், 'அருகில் ஒரு புலி, காட்டிலிருந்து தப்பித் தவறி வந்து அட்டகாசம் செய்கிறது' என்றுதான் அதன் பொருள். தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் கிலி இது!

ஆனால் இன்று, 'புலி வருகிறது' என்றால், அதற்கு வேறு ஒரு பொருள் இருக்கிறது. ஆளை அடித்துக் கொல்லும் புலி அல்ல இது; நேர்மாறாக, மக்களுக்கு நம்பிக்கையூட்டும்—நாட்டுக்கு வளம் கொணரும் 'புலி' இது!

உண்மையில் இது விலங்கே அல்ல; இது ஓர் ஊர்தி; ஜீப் காரை விடச் சற்றுப் பெரிது; ஊர் ஊராகச் சென்று கிணறு வெட்டும் இயந்திரம் இது!

கிணறு வெட்டுவதற்கு வேண்டிய தளவாடங்கள் அனைத்தும் இதில் இருக்கின்றன; இதன் நிறம் வெள்ளை.

'டைகர்' (புலி), இந்த இயந்திரத்தின் வணிக முத்திரை! இந்தியா நெடுகிலும் வெளிநாட்டுக் கிறித்துவ உதவி நிலையம் தரும் உதவியுடன் பணியாற்றுகிறது! வண்டியோட்டியின் இருக்கைக்குப் பின்னால், கிணறு தோண்டும் இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கிறது.

இந்த இயந்திரம் ஒரு கிராமத்துக்கு வந்ததும், அதில் இருக்கும் பெரிய கம்புச் சட்டம், வண்டிக்குப் பின்புறமாகக் கொண்டு வரப்பட்டுத் தரையில் செங்குத்தாகப் பொருத்தப்படுகிறது. பூமியில் தண்ணீர் இருக்குமிடமும், அதன் அடியில் பாறையும் கண்டு கொள்ளப்பட்ட பிறகு, கம்புச் சட்டத்தில் இருக்கும் சம்மட்டி இயக்கப் பெற்று, 50 மீட்டர் ஆழமிருக்கும் பாறைக்குள் ஒரு சில மணி நேரத்தில் தொளை செய்துவிடுகிறது. இது கிராமவாசிகளுக்கு மிகவும் திருப்தியளிக்கும் சாதனமாகும். ஏனெனில் பாறையை வெடி வைத்துப் பிளந்து கிணறு வெட்டும் வழக்கமான முறை, மிகவும் செலவு பிடித்த ஒன்றாகும்.

சென்ற ஆண்டு மேற்கு மத்திய இந்தியாவில் மகாராட்டிர மாநிலத்திலும், வட கிழக்கு இந்தியாவின் பீகாரிலும், 'டைகர்' பல கிணறுகளை வெட்டியிருக்கிறது. இந்த இரு மாநிலங்களிலும் தண்ணீர்ப் பஞ்சம் உள்ளது; அதனால், விளைச்சலும் மிகக் குறைவு; இதேபோல், நல்ல குடிதண்ணீரும்கூட கிடைப்பதில்லை.

'டைகர்' இதற்கு வகை செய்கிறது; புதிய நவீன முறைகளைக் கையாளுகிறது!

இன்னொரு வகைக் கிணறு குழாய்க் கிணறு; இது, மிக ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்க வகை செய்கிறது!

ஆயினும், இந்தியாவில் அதிகக் கிணறுகள் வெட்டும் இயக்கத்திற்குச் சின்னமாக இருப்பது இந்த 'வெண் புலி'தான்!

ஏட்டிக்குப் போட்டி!

மொரார்ஜி தேசாயின் ஆதரவாளர்களான எட்டு நாடாளுமன்ற காங்கிரசு உறுப்பினர்கள், பாங்கிகளை நாட்டுடைமை ஆக்குவதையும், மன்னர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் மானியத்தை நிறுத்துவதையும் எதிர்த்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

"சின்னாட்களுக்கு முன்பாக, 10 காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்களை, மேற்கண்ட கொள்கைகளை ஆதரித்து அறிக்கை விடுத்ததற்குப் போட்டியாகவும், அடுத்த வாரம் ஜபல்பூரில் நடைபெறப் போகும் அனைத்து இந்தியக் காங்கிரசுக் கமிட்டி கூட்டத்தை மனத்திற்கொண்டும், இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது" என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

கல்பாக்கம் அணு விசை நிலையம்

கட்டுமான வேலைகள் துவக்கம்

சென்னை, அக். 26—

கல்பாக்கத்தில் அமையவிருக்கும் அணுவிசை நிலையத்தில், துரித அணு உலை நிறுவப்படும்; அது, இந்தியாவில் அமையும் முதல் துரித அணு உலையாக இருக்கும்.

"அது, யுரேனிய அணு உலைகளிலிருந்து பெறப்படும் புருட்டோனியத்துடன் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கும் தோரியத்தைப் பயன்படுத்தும் எதிர்கால அணு விசை நிலையங்களுக்கு முன்னோடியாக அமையும்.

இதற்கிடையே மின்விசை நிலையம்—குடியிருப்பு வசதி—பள்ளி, மருத்துவமனை போன்றவற்றைக் கட்டுவதற்கான முன்னோட்ட வேலை, கல்பாக்கத்தில் தொடங்கி விட்டது.

கல்பாக்கம் ஒரு சிற்றூர்; அது சென்னையிலிருந்து கிழக்கே கடற்கரையருகே 40 மைல் தொலைவிலும்—மகாபலிபுரத்திலிருந்து நான்கு மைல் தொலைவிலும் உள்ளது. அங்கு வேலை, மும்முரமாக நடந்து வருகிறது.

அணு உலை வேலை இனித்தான் தொடங்க வேண்டும்; ஆனால், கட்டுமானப் பொருட்கள் இணைக்கப்பட்டு வருகின்றன. மண் பகுப்பாராய்வு, மற்றும் இதர ஆராய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

வெ[illegible]ர்ப் பயணத்தைக் குறைத்துக்கொள்க

டில்லி அமைச்சர்கட்கு இந்திரா கட்டளை

புதுடில்லி, அக். 25—

"காபினட் அமைச்சர்கள் தலைநகரை விட்டு நீங்கி நெடுங்காலம் இருத்தலாகாது" என்று தலைமை அமைச்சர் இந்திரா காந்தி கேட்டுக்கொண்டிருப்பதாக விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அமைச்சர்கள் முக்கியமான முடிவுகளை எடுப்பதற்காகவும், அரசு இயந்திரத்தை இயங்கச் செய்வதற்கும் புதுடில்லியில் அமைச்சர்கள் இருக்க வேண்டுமென்று தலைமையமைச்சர், கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர்கள் தலைநகரைவிட்டுக் கிளம்புவதற்கு முன்னர், தமது சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரலைத் தலைமையமைச்சர் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்க வேண்டும்.

"மிகவும் இன்றியமையாததாக இருந்தாலன்றி, அயல்நாட்டுப் பயணத்தை அமைச்சர்கள் மேற்கொள்ளலாகாது" என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இளநிலை அமைச்சர்களின் பணிகளையும் வரையறை செய்ய இந்திரா காந்தி விரைவில்நடவடிக்கை எடுப்பார் என்று அரசியல் நோக்கர்கள் நம்புகின்றனர்.

மழையால் ஏற்பட்ட நட்டத்தையும் மீறி....!

"இன்னும் சிறிது சிரமப்படுவோமானால், தமிழ்நாட்டிலிருந்து அரிசியை வெளியில் விற்கும் அளவுக்கு முன்னேறுவோம்!

"சன்ன ரக அரிசியை உற்பத்தி செய்வோ[illegible]னால், அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

"இன்னும் கொஞ்சம் நிதி உதவி கிடைக்குமானால், உணவு உற்பத்தித் [illegible]றையில், இத் துணைக்கண்ட[illegible]ழுமைக்கும் தமிழ் நாடு [illegible] காட்ட இயலும்!

"இப்போதைய அறுவடையைப் பொறுத்தமட்டில், கடந்த வாரத்தில் மழையினால் ஏற்பட்ட நட்டத்தையும் மீறி அறுவடை நன்றாகவே இருந்து வருகின்றது! வெளிமாநிலம் எதனிடமும், 'அரிசி கொடு' என்று கேட்டுச் செல்லும் நிலைமை நமக்கேற்படாது!"

வலியா? ஜலதோஷமா?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

AM/3768

வழக்குரைஞர்களின் எழுத்தர்கட்கு வாழ்க்கை வசதி

அமைச்சர் மாதவன் வற்புறுத்தல்

13—10—67 அன்று சேலத்தில் வழக்குரைஞர் எழுத்தர்கள் சங்க 4-வது மாநில மாநாடு நடைபெற்றது; சேலம் மாவட்ட நீதிபதி ஜமால் உசேன் கொடியேற்றி வைத்தார்; மாநாட்டை கோவை வழக்குரைஞர் சி. பி. கந்தசாமி தலைமையில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி டி. ராமபிரசாத் ராவ் துவக்கிவைத்தார்.

மாநாட்டுக்கு சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் வருகை தந்து சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"வழக்குரைஞர்களுக்கு எழுத்தர்கள் (குமாஸ்தாக்கள்) மிகவும் அவசியம். அவர்களுக்குக் கூடுமானவரையில் வழக்குரைஞர்களே ஊதியம் அளிக்க முன்வர வேண்டும்.

எழுத்தாளர்களின் உதவியின்றி வழக்குரைஞர்கள் செயல்பட முடிவதில்லை; இதை உணர்ந்து, அவர்களது வாழ்க்கைக்[illegible] வழக்குரைஞர்கள் உதவிகரமா[illegible] வேண்டும்.

நீதிமன்றங்களினுள் வழக்குரைஞர்களை அனுமதிப்பது போல், அவர்களது எழுத்தர்களையும் அனுமதிக்கிறோம்.

வழக்குரைஞர்களுக்கு நீதிமன்றங்களில் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதுபோல், அவர்களின் எழுத்தர்களுக்கும் தனி இடம் ஒதுக்க அரசினரால் ஆவன செய்யப்படும்.

வழக்குரைஞர்களின் செலவுப் பட்டியலில் எழுத்தர்களின் செலவையும் அனுமதிக்க உயர் நீதிமன்றத்தினருடன் கலந்தாலோசித்து உடனடியாக ஆவன செய்ய முயற்சிக்கிறோம்."

மாநாட்டில், வழக்குரைஞர் எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் தர்மபுரி பி. எஸ். சிவானந்தம், கோவை மாவட்ட உதவி நீதிபதி எஸ். நடராசன், பாஸ்கர், ஆதி நாராயணன் ஆகியோரும் பேசினர்.

செயலாளர் வி. குருமூர்த்தி நன்றி கூறினர்.

பம்பாய்--தாராவி

சத்தியவாணிமுத்து மன்றம்

பம்பாய்-தாராவியில் டாக்டர் சத்தியவாணிமுத்துமன்றத் திறப்பு விழாவும், அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த நாள் விழாவும் 14—10—67 மாலை 6-30 மணியளவில் கணேசர் கோவில் பெருவெளியில் சேரை மு. இராசகோபாலன் தலைமையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

த. மு. பொற்கோ, மன்றத்தைத் திறந்துவைத்தும் — எஸ். தியாகராசன் சத்தியவாணிமுத்து படத்தைத் திறந்துவைத்தும்—பி. எஸ். செல்லையா அறிஞர் அண்ணா படத்தைத் திறந்துவைத்தும்—சு. நவயுவன் கொடியேற்றிவைத்தும் சொற்பொழிவாற்றினர்.

தோழர்கள் எம். ஏ. சண்முகம், பாண்டியன், இலங்கை சண்முகவேல், குடியரசன், இ. பி. நயினர், இ. எம். முருகேசன், ப. முகம்மது, சிதம்பரம், எல். என். செழியன், தமிழ்மாறன். கடையநல்லூர் ஆ திராவிடமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

துணைச் செயலாளர் பி. யு. இராமையா நன்றி நவில விழா சிறப்பாக நடந்தேறியது.

புதியம்புத்தூர் ஊராட்சிமன்ற உறுப்பினர் எம். அல்போன்சு அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

திண்டுக்கல்--பேகம்பூர்

முரசொலி மன்றம்

திண்டுக்கல்—பேகம்பூர் முரசொலி மன்ற உறுப்பினர்கள் கூட்டம் 18—10—67 இரவு 10-மணிக்கு மன்றக் கட்டிடத்தில் நடைபெற்றது; அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: பொன். சீனிவாசன்; செயலாளர்: கே. வீரப்பன்; :துணைச்செயலாளர்: வி. அண்ணாமலை; பொருளாளர்: டி. எஸ். பி. ரங்கநாதன்; செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. பெரியசாமி, எஸ். எஸ் மணி, எம். சிங்காரவேலர், எம். பிச்சை. எம். ஜமால் மைதீன், எல். பாலு, சி. குருசாமி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மத்திய – மாநில பிணக்குகள் பற்றி வரவேற்புரையில் சுட்டிக் காட்டினார்கள்; நான் அமைதியை நேசிப்பவன். இரண்டு பேர் சண்டை போட்டுக்கொண்டாலே அதைக் காணக்கூட நான் சகிக்கமாட்டேன்; எனது இயற்கை அப்படியிருக்கும் போது, பிணக்குகள் ஏற்பட நான் எப்படி கருவியாக அமைவேன்?

இயற்கைக் காரணங்களால் பிணக்குகள் ஏற்படக்கூடும். ஆனால், நான் அவற்றிற்குக் காரணமாக இருக்கமாட்டேன். மத்திய அரசுக்கு நாம் விடுகிற முறையீடுகளும், வேண்டுகோள்களும், பிணக்குக்கு – உரியவைகளாகக் கருதப்படக்கூடாது."

மறைவு

சென்னை 10-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர் டி. வி. இராமன் 23—10—67-ல் இயற்கையெய்தினார்; அன்னாரின் மறைவால் வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு 10-வது வட்ட தி. மு. க. சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டம்--ஒழுங்கு குலைந்துவிட்டதா?

செய்தியாளர்களிடம் அண்ணா கேள்வி

கோவை, அக். 25—

தமிழகத்தில் சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாகக் கூறப்படும் புகார்கள் பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, அவர்களிடமே அறிஞர் அண்ணா அவர்கள்,

"சட்டம்--ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறதா என்பதை நீங்கள் அறிந்து, உங்கள் பத்திரிகைகளில் எழுத வேண்டும்"

என்று கூறி, 'இப்போது கொலைகள், கொள்ளைகள் குற்றச் சாட்டுக்கள் அதிகமாகி இருக்கின்றனவா' என்று கேட்டார்.

அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது :—

'தொழிலாளர் நிலைமையை எடுத்துக்கொண்டாலும், கோவையில் அமைதி நிலவுகிறது ; மதுரையிலும், பிற இடங்களிலும் அமைதி நிலவுகிறது.

"தொழிலாளர்கள், கோரிக்கைகளை எழுப்புவது இயற்கையே ; அது, அவர்கள் உரிமை ; உடன்பாடு காண தொழிலதிபர்கள் பேரம் பேசுவதும் இயற்கையே ; இன்று நாம் காண்பது முன்பிருந்த ஆட்சியினர் விட்டுச் சென்றதுதான்."

'அவசரப்பட்டு முடிவு செய்துவிட்டோம்--- ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளைக் கைவிடுகிறோம்'

அண்ணா முன்னிலையில் ஆசிரியர் பிரதிநிதிகள் அறிவிப்பு

சென்னை, அக். 26—

சென்னை ஆசிரியர்கள் சங்கம் (கில்டு) நகர ஈட்டுப் படிக்காக இன்று ஊர்வலம் நடத்துவதாக இருந்தது.

அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் ஊர்வலம் நடத்துவதையும், மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் கைவிட்டு விடுவதாக முதலமைச்சர் அண்ணா அவர்கள் முன்பு ஒப்புக்கொண்டனர்.

சென்னை ஆசிரியர்கள் சங்க (கில்டு) செயலாளர்கள் ஆதிமூலம், இருதயராஜ் ஆகியோர் பேராசிரியர் க. அறிவழகன் எம்.எல் சி. அவர்களுடன் சென்று முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்தனர்.

அண்ணா அதர்கள், ஆசிரியர்களிடம் காட்டும் தனிப்பட்ட பரிவினை நேரில் கண்ட அவர்கள், அவசரப்பட்டுத் தீர்மானம் எடுத்ததற்காக வருத்தம் தெரிவித்தனர்.

அண்ணா அவர்கள், ஆசிரியர்கள் கோரும் நகர ஈட்டுப் படி கோரிக்கையை நிச்சயம் ஏற்பதாகக் கூறினர்.

இதனால் திருப்தியடைந்த ஆசிரியர்கள், ஊர்வலத்தைக் கைவிடுவதாகவும், மற்ற எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாமலிருப்பதாகவும் உறுதியளித்தனர்.

புலவர் தியாகராசன், புலவர் அரசுமணி, நடராசன் ஆகியோரும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

திருமண வயது உயரும்?

புதுடில்லி, அக். 25—

திருமண வயதை பெண்களுக்கு 21 ஆகவும், ஆண்களுக்கு 25 ஆகவும் உயர்த்த விரைவில் நடவடிக்கைகள் எடுப்பதென, மத்திய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டக் குழு முடிவு செய்துள்ளது.

உள்நாட்டு முறை மருத்துவர்களையும், ஓமியோபதி மருத்துவர்களையும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட நடவடிக்கைகளில் சம்பந்தப்படுத்த வேண்டுமென்றும் குழு தீர்மானித்தது.

கோ. சு. மணி

நினைவுச் சின்னம் திறப்பு விழா

சென்னை, அக். 26—

விலைவாசிக் குறைப்பு அறப்போரில் ஈடுபட்டு சிறையிலே உயிர் நீத்த கோ. சு. மணியின் நினைவுச் சின்னத் திறப்பு விழா 29—10—67 மாலை 5-மணிக்கு மயிலை இடுகாட்டில் நடைபெறும்.

மேயர் இரா. சம்பந்தம் தலைமை வகிப்பார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா, உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், செய்தித்துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., வி. முனுசாமி எம்.சி., துணை மேயர் டி. கிருஷ்ணமூர்த்தி, டி.கே. கபாலி, ஏ. ஏ. கபாலமூர்த்தி ஆகியோர் பேசுவர்.

வரவேற்பு: மங்கலட்சுமி-மணி.

இந்த விழா மாநகராட்சி தி.மு.க. சார்பில் நடத்தப்படுகிறது.

சனநாயகப் பாதுகாப்பு

மாணவர் மாநாடு

29 -- 10 -- 67 ஞாயிற்றுக்கிழமை

சென்னை-தேனும்பேட்டை ஆபட்ஸ்பரி மண்டபத்தில்

★

தலைவர்: துரைமுருகன் பி.ஏ.

திறப்பாளர்: துரைகலியரத்தினம் பி.ஏ.

வரவேற்புரை: ம. செல்வராசன்

சிறப்புரை:

அறிஞர் அண்ணா

இரா. நெடுஞ்செழியன்
மு. கருணாநிதி
கே. ஏ. மதியழகன்
சத்தியவாணிமுத்து
ஏ. கோவிந்தசாமி
செ. மாதவன்
எஸ். ஜே. சாதிக்பாட்சா
மா. முத்துசாமி

சி. பா. ஆதித்தனர்
எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.
[illegible] சிவஞானம் எம்.எல்.ஏ.
எஸ். எஸ். மாரிசாமி எம்.பி.
அப்துஸ் சமது எம்.பி.
முரசொலி மாறன் எம்.ஏ.

29—10—67 காலை 9 மணிக்கு நேப்பியர் பூங்காவிலிருந்து ஊர்வலம்புறப்பட்டு மாநாட்டுப் பந்தலையடையும்

நன்கொடை: ரூ. 1; மகளிர்க்கு 50 காசு

—சென்னை மாணவர் சனநாயக அணி

★ மகாத்மாவின் மனத்திற்குகந்த திட்டம் கதர்!
★ வாழவகையில்லாத மக்களுக்கு வாழ்வளிப்பது கதர் !
★ நாட்டு மக்களின் வாழ்வு நலமுற கதரையே வாங்குங்கள் !
★ ஏழைகளின் வாழ்வு ஏற்றமுற கதரையே வாங்குங்கள் !

தமிழக அரசு கதர் -- கிராமத் தொழில் ஆயம்

உள்ளாட்சித்துறை அமைச்சரும், தமிழகக் கதர்—கிராமத் தொழில் ஆயத்தின் தலைவருமான திரு. மா. முத்துசாமி பி.ஏ.பி.டி. அவர்கள், கீழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் :—

"காந்தி அண்ணலவர்களின் விருப்பத்தின் விளைவாகத் தோன்றிய இக்'கதர்-கிராமத் தொழில் ஆயத்தில், இன்று தமிழகத்தில் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், தாய்மார்களும் ஈடுபட்டுப் பாடுபட்டு வருகின்றனர். அவர்தம் வாழ்வு வளமுற—அண்ணலின் எண்ணம் நிறைவுற—அனைவரும் இத்தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவது அவசியமாகிறது."

(ஒ-ம்) **மா. முத்துசாமி**

தமிழகக் கதர்—கிராமத் தொழில் ஆயத்தின் துணைத் தலைவர் திரு. பி. என். பரமசிவம் எம்.எல்.ஏ. அவர்களுடைய வேண்டுகோள் :—

"தமிழகமெங்கும் கதர் விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன. அக்டோபர் மாதத்தில் மேலும் பல இடங்களில், பொதுமக்கள் வசதியை முன்னிட்டு தற்காலிகமாகக் கதர் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலும், 2—10—1967 முதல் 1—11—1967 வரை பருத்தி ரகங்கள்மீது 20 சதவிகிதமும், பட்டு ரகங்கள்மீது 10 சதவிகிதமும் விலையில் விசேடத் தள்ளுபடி அளிக்கப்பட்டிருக்கிறது.

"ஆசிரியப் பெருமக்களும், அரசு மற்றும் எல்லாத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களும், மாணவ மாணவியரும், மற்றும் பொதுமக்களும், பெரும் அளவிற்குக் கதர் வாங்கி, கதர்த் திட்டத்தில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான நூற்போர்கள்—நெசவாளர்கள்—மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு நல்வாழ்வு தருவதோடு, நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைக்க முன்வரும்படி கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் ஒவ்வொரு இல்லத்திலும் கதர் வாங்கி ஆதரவு கொடுக்க வேண்டும் என மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்."

தங்களன்புள்ள,

(ஒ-ம்) **பி. என். பரமசிவம்**

தென் சென்னை

இடைத் தேர்தல்

தி.மு.க. மத்திய தேர்தல் அலுவலகம்

47-இ, வடக்கு உஸ்மான் ரோடு—சென்னை-17

தொலைபேசி எண் :

443017

நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

27--10--67

சென்னை 73-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 8-30 மணிக்கு சேப்பாக்கம் அருணாசல ஆச்சாரி தெருவில் ; தலைவர் : டி. சந்திரன் ; பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் எம்.எல்.சி., அமானுல்லா எம்.சி., சி. ஆதிகேசவன், கோ. பிச்சை.

28--10--67

சென்னை 10-வது வட்டம்

வட சென்னை பித்தளை வியாபாரிகள் சங்கச் சார்பில் தீ விபத்து நிவாரண நிதியளிப்பு விழா; இரவு 7 மணிக்கு வண்ணை கல்லறைத் திடலில் ; தலைவர் : வி. பி. சாரதி ; பேசுவோர் : அறிஞர் அண்ணா, கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., எம். மாயாண்டி, வி. சுந்தரமூர்த்தி, என். ஆர். வீரஜின்னு, எஸ். வி. இராமச்சந்திரன், ஏ. சின்னையா.

சென்னை 81-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு சீனிவாச அய்யங்கார் சாலையில் ; தலைவர் : ஆ. ச. தட்சணமூர்த்தி ; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், கி. மனோகரன் எம்.ஏ, எம்.பி., க. இராசாராம் பி.ஏ., எம்.பி., கோ. விசுவநாதம் எம்.பி., முரசொலி மாறன் எம்.ஏ., வை. பாலசுந்தரம், அ. டேனியல், புசு. இலக்குவன், கோ. இளங்கோவன், ர. சுப்புக்கண்ணு.

சென்னை 91-வது வட்டம்

டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மைனர் டிரஸ்ட்புரத்தில் தலைவர்: சி. மாணிக்கம் ; பேசுவோர் : அமைச்சர் சத்தியவாணிமுத்து, புலவர் அறிவுடைநம்பி, கோவை இராமநாதன், காஞ்சி மணிமொழியார், முரசொலி மாறன் எம்.ஏ., வை. பாலசுந்தரம், வசந்தகுமார், து. புருஷோத்தமன், செ. மோகனப்பா, [illegible] வி. சிட்டிபாபு, சி. வி. மலையன், மு. மணிவேந்தன், பி. ஆனந்தகிருட்டினன், எஸ். இரத்தினவேல்.

சென்னை 82-வது வட்டம்

கே.ஆர்.ஆர். படிப்பகச் சார்பில் இரவு 7 மணிக்கு கணேசபுரத்தில் (இராமகிருஷ்ணசாலைச் சந்திப்பில்); தலைவர் : ஆர்.சி.கே. சாமி ; பேசுவோர் : அமைச்சர் கே.ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., எஸ். வி. வேலு, முரசொலி மாறன் எம்.ஏ., வெ. கண்ணன், பி. டி. இராகவன், தமிழ்மணி, புலமைப் பித்தன், மயிலை மாறன், எம். கே. கபாலி, டி. கோவிந்தன், மு. சீனிவாசன், ஏ. டி. கன்னியப்பன்.

சென்னை 72-வது வட்டம்

எம் ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு நாகப்பையர் தெருவில் (ஸ்டார் டாக்கீசுக்கு எதிரில்); தலைவர் : எஸ். எம். கிருட்டினன் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., ஈ. சின்னசாமி, முரசொலி மாறன் எம் ஏ.

மானாமதுரை

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு சோனையா கோயில் எதிரில் ; தலைவர் : எம். ஆர். சுப்பிரமணியம் ; பேசுவோர் : ஆ. திராவிடமணி, பொ. குமரன், மு. க. எழில்மன்னன்.

பேர்ணம்பட்டு

எம் ஜி.ஆர். மன்றத் துவக்க விழா மாலை 6 மணிக்கு ; தலைவர் : தா. சுப்பிரமணியம் ; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., பி. கே. முனுசாமி, பி. செயராமன் எம்.எல்.ஏ., ஏ. க. துரைசாமி, பெ. க. முனிரத்தினம், ஏ. ஏ. ரகுமான், தே. மனோகரன்.

கோபால்பட்டி

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு வள்ளுவர் திடலில் ; தலைவர் : பா. இராமச்சந்திரன் எம்.ஏ., எம்.எல்.ஏ., அ. தங்கவேலு, பொன். சீனிவாசன், பெ. சுப்புராமன், பெ. சீத்தாராமன், கி. இராமசாமி, இரா. கோவிந்தராசன்.

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

அக். 27 : சிதம்பரம்—ஸ்ரீமுஷ்ணம், சிதம்பரம் வழக்கறிஞர்கள் சங்கம்—அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிகழ்ச்சிகள் ; இரவு : பொதுமக்கள் வரவேற்பு.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டி தெரு, சென்னை-[illegible]) [illegible]